# தமிழியக்கம்

தமிழ்ப் பருவஇதழ்

விலை : உரு. 10

தமிழ்ப் பருவஇதழ்



திபி. 2032, மடங்கல் (ஆகஸ்டு, 2001)

அட்டைப்பட அறிஞர்

# தமிழ்க்காவலரும் தமிழ்ப் பெருங்காவலரும்

தமிழ்மொழி நலம்பெறவும் தமிழர்கள் தன்மானமுறவும் தம் வாழ்நாள் முழுதும் தளராது உழைத்த தமிழ்க்காவலர் பண்டாரகர்(Dr.) சி.இலக்குவனார் ஆவார். ''ஆறடி வளர்ந்த நல்லாண்மைத் தோற்றம்; நீள் மேலாடை பூண்ட வீறு; முழங்கால் தோய வீசி நடக்கும் கைகள்; ஏறுபோல் நிமிர்ந்த நடை; தமிழுக்கு இன்னல் நேரின் தன்னுடல் ஈயும் நெஞ்சம்'' என்று தன்னலம் இல்லாத் தமிழ்வாழ்வு வாழ்ந்த இவரைப் படம்பிடித்துக் காட்டுவார் மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்கள்!

தஞ்சை மாவட்டக் கீழைக்காட்டில் சிங்காரவேலு - இரத்தினம் அம்மாள் இணையரின் மூன்றாம் மகனாகப் பிறந்த இவரின் இயற்பெயர் இலட்சுமணன் என்பதாம். பள்ளியாசிரியர் சாமி சிதம்பரனாரால் இலக்குவன் எனப் பெயர் மாற்றம் பெற்ற இவர் தம் ஆசிரியர் காட்டிய நெறியை ஏற்று இளமையிலேயே தன்மான இயக்கத்தில் இணைந்தார்; பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பினார்.

வித்துவான், இளங்கலை, கீழைக்கலை இளவல் (B.O.L.) பட்டங்களைப் பெற்ற இவர், 'தமிழ்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து கீழைக்கலை முதுவர்(M.O.L.) பட்டமும் பெற்றார். 1936-இல் திருவாரூர் கழக உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகச் சேர்ந்த இவர், 31.12.1970-இல் நாகர்கோவில் தெ.தி.இந்துக்கல்லூரி முதல்வராக ஒய்வு பெற்றார். கிட்டத்தட்ட 34 ஆண்டுகள் பல்வேறு பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார்.

1961-இல் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றும்போது, ''தமிழ், தட்டுத்தடையற எட்டுத் திசையிலும் முட்டப் பழமையின் விட்டுப் பொலிவுறத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்'' அமைத்தார்; மதுரை நகரெங்கும் ஊர்வலமாகச் சென்று கடைப்பெயர்களைத் தமிழில் எழுதும்படி கோரினார்; அக்கழகத்தின் சார்பில் 12.1.1964-இல் தேவநேயப் பாவாணருக்குப் பாராட்டுவிழா நடத்தினார். அவ்விழாவில் பாவாணர்க்குத் ''தமிழ்ப்பெருங்காவலர்'' என்னும் பட்டம் வழங்கிப் பட்டுப் போர்த்திப் பாராட்டினார் இலக்குவனார்.

இவர் தம் ஐம்பதாம் அகவையில் தொல்காப்பிய ஆராய்ச்சி நூல் இயற்றி பண்டாரகர்ப் பட்டம் பெற்றார். அதனைப் பாராட்டிப் பாவாணர்,

பா.இளங்கோ, க.மு., ஆய்.மு.



''பண்டாய பண்பாட்டுப் பைந்தமிழைக் காத்தற்குத்
தண்டாரும் தொண்டர் தலைமகனாய்க் - கண்டதன்றோ
பண்டார கர் பட்டம் பாங்காய் இலக்குவனார்
கொண்டாடப் பெற்ற குறி''

என்று வாழ்த்து விடுத்தார். (குறள்நெறி, 15.8.64).

26.1.1965 முதல் இந்திய அரசின் அலுவல் மொழியாக இந்தி மொழியை மட்டும் ஏற்கின்ற சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதனை எதிர்த்துத் தமிழ்நாடெங்கும் மாணவர்கள் கிளர்ந்தெழுந்தனர். தே.மு.சிவலிங்கம் (24) என்ற கட்டிளங்காளையும் அரங்கநாதனும் (32) தீக்குளித்தனர். இலக்குவனார் தாம் நடத்திவந்த 'குறள்நெறி' என்னும் இருகிழமையிதழில் இந்தித் திணிப்பை எதிர்த்துக் கட்டுரைகள் வெளியிட்டார். மாணவர்களுக்குத் தமிழுணர்ச்சியூட்டி இந்தியை எதிர்க்குமாறு தூண்டினார். மாணவர்களின் போராட்டத்திற்குக் காரணியமானவர் இலக்குவனாரே எனக் கருதிய தமிழக அரசு, இவர் மேல் இந்தியை எதிர்த்துத் தேச இரண்டகம் புரிந்தார் எனக் குற்றஞ்சாட்டி 1.2.1965 அன்று தளைப்படுத்தியது. அதனால் இவர் தம் வேலையையும் சிலவாண்டுகள் இழக்க நேரிட்டது.

இந்நிலைகளைக் கூர்ந்து கவனித்துவந்த பாவாணர் இந்தித் திணிப்புப் பற்றிய தம் அறிக்கையைத் தென்மொழியில் (பிப்பிரவரி 1965) வெளியிட்டார். அவ்வறிக்கையில்,

''இந்தியால் தமிழ் கெடும் என்றும் இந்தி தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் தீங்கு விளைப்பது மட்டுமன்றி அனைத்திந்தியப் பொது மொழியாவதற்கு எள்ளளவும் தகுதியற்றதென்றும் தவத்திரு மறைமலையடிகள், பேரா. கா.சுப்பிரமணியம் (எம்.ஏ., எம்.எல்.) அவர்கள், பேரா. சோமசுந்தர பாரதியார் (எம்.ஏ., பி.எல்.) ஆகிய முப்பெருந் தமிழ்ப் பேராசிரியரும் 1937 -இலேயே எழுத்து வாயிலாகவும் வாய்மொழி வாயிலாகவும் திட்டமாகவும் வலிமையாகவும் தெரிவித்துவிட்டனர்.

தமிழுக்கு அதிகாரிகள் தமிழ்ப் பேராசிரியரே அன்றி, பேராயக் கட்சி (Congress) அமைச்சர்களும் வடவரும் அல்லர். தமிழர் நூற்றுமேனி எண்பதின்மர்தற்குறியாதலால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களும் பிறரும், மொழி நாகரிகம் பண்பாட்டுத் துறையில் தமிழ்நாட்டுப் படிநிகராளியர் (Representatives) ஆகார். தமிழைக் காத்தல் தமிழாசிரியர் கடமை. தமிழுக்கு நேரும் கேட்டை உணரக்கூடிய பொதுமக்கள் மாணவரே. வருங்காலத் தமிழ்நாட்டை ஆளும் பொறுப்பு வாய்ந்தாரும் அவரே. ஆதலால், பேரா. இலக்குவனாரைத் தண்டிப்பின், பேரா. மு.வ., பேரா. அ.சிதம்பரநாதனார் உட்படத் தமிழாசிரியர் அனைவரும் பதவியை விட்டுவிடுதல் வேண்டும்'' என்று பாவாணர் அறிவுறுத்தியிருந்தார். ஆயின் இலக்குவனார் தண்டிக்கப்பட்டதைத் தமிழ்ப்புலவர் குழுகூடக் கண்டிக்கவில்லை என்று மனம் வருந்தித் தமிழ்வரலாற்றில் எழுதினார்.

இந்தித் திணிப்பினால் தமிழர்களுக்கு ஏற்படும் இன்னல்களையும் இழப்புகளையும் எடுத்து விளக்கும் வகையில் மதுரையிலிருந்து சென்னை

வரை பெருநடைச் செலவு செல்லத் திட்டமிட்டார் இலக்குவனார். 9.5.65 அன்ற மதுரையில் தொடங்கி, 5.6.65 அன்று சென்னையில் முடிவடைய விருந்த அவ்வழி நடைச் செலவில் இலக்குவனாருடன் பங்கேற்க புலவர் இளங்குமரனார், வி.பொ.பழனிவேலனார், வீ.கா.ப.சுந்தரனார் உள்ளிட்ட அறுபத்தெழுவர் அணியமாயிருந்தனர். இதனால் வெகுண்ட தமிழக அரசு, இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி இலக்குவனாரை 2.5.65 அன்று தளைப்படுத்தி வேலூர்ச் சிறைக்கு அனுப்பியது.

இலக்குவனாரைப் பற்றி உசாவி, மதுரை வி.அ.கருணைதாசர்க்கு மடல் வரைந்த பாவாணர், அம்மடலில், ''பர். இலக்குவனார் எங்கிருக்கின்றார்? என்ன செய்கின்றார்? பெருநடைச் செலவு வேண்டாம் என்று ஏற்கனவே தடுத்தேன். தமிழ்ப் பகைவரை நம்பி என் சொல்லைத் தட்டிவிட்டார்'' என்று நெஞ்சுநெகிழ்ந்து எழுதினார்.

வள்ளுவரின் குறள்நெறியை வாழ்நெறியாகக் கொண்டொழுகிய இலக்குவனார் செந்தமிழுக்கு ஆக்கம்தரும் பதினான்கு தமிழ் நூல்களையும் ஐந்து ஆங்கில நூல்களையும் இயற்றியுள்ளார்.

''என் வாழ்க்கையே தமிழ்நலம் நாடிய போராட்டக் களம்தான். இளமையில் வறுமையோடு போர்; சாதி வெறியோடு போர்; மூடநம்பிக்கைகளோடு போர்; தமிழுரிமைக்காகப் போர்; போர்! போர்! என்றும் ஓயாத போர்தான்!'' என்று தம்மைப் பற்றிக் குறித்த இலக்குவனார் 3.9.1973-இல் பெரும்பிறிதுற்றார். இலக்குவனாரின் பிரிவையறிந்த பாவாணர், ''இந்தியை எதிர்த்து வீழ்த்தி இருந்தமிழ் மீட்டுக் காக்கும், செந்தமிழ்ப் படையின் மானச் செம்மலை இழந்தோம்'' என்று கலங்கி இரங்கற்பதிகம் பாடினார். ''மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேய்ந்தர் பதவிக்கு முழுத்தகுதி இவர்க்கிருந்தும் அதைப் பெறாது போனது வருந்தத்தக்கது'' என்று மனங்கவன்றார்.

தமிழையும் தன்மானத்தையும் வள்ளுவத்தையும் பரப்புதற்காகவே தம் வாழ்வை ஒப்படைத்துக் கொண்டவர் இலக்குவனார்; இவர் தமிழுக்காகவே துன்பப்பட்டார்; தமிழின் பொருட்டே சிறை சென்றார்; தமிழர் முன்னேற்றத்திற்காகவே அயராது உழைத்தார். அவராற்றிய தமிழ்த்தொண்டு நெறியில் தொடர்ந்து செல்லுதலே நாம் இவர்க்குச் செய்யும் நன்றிக் கடனாய் அமையும்.

**சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்க்குப் பாராட்டு!**

நடுவணரசு கல்வித்துறை அமைச்சகம் பல்கலைக்கழகங்களில் மறைக்கல்வி (வேதக்கல்வி)யைப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கற்பிப்பதற்குப் பல இலக்க உருபா ஒதுக்கித்தர முன்வந்து, பல்கலைக்கழக நல்கைக்குழு வழியாகச் செயற்பாட்டைத் தொடங்கியுள்ளது. ஒருசில இலக்க உருபாவுக்கும் சில பேராசிரியர் நாற்காலிகட்கும் பல்லிளித்த பல்கலைக்கழகங்கள் மறைக்கல்விக்கு ஒப்புதல் அளித்துள்ளன. சென்னைப் பல்கலைக்கழகத்தில் மறையோதுங் கல்விக்கு இடமில்லையெனத் தன்மானத் துணிவுடன் துணைவேந்தர் முனைவர் பொற்கோ அறிவித்துள்ளதற்குத் தமிழியக்கம் பாராட்டைத் தெரிவிக்கிறது.



அட்டைப்பட அறிஞர்

# பண்டாரகர் சி.இலக்குவனார் ஒரு மேதகை

இலக்குவனாரும் யானும் ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை அரசர் மடத்திலும் ஒறுத்தவன் நாட்டிலும் உடன் பயின்றோம். பதினோராம் வகுப்பு தேறியபின் இலக்குவனார் திருஐயாறு புலவர் கல்லூரியில் சேர்ந்து தமிழ்ப்புலமை பெற்று நன்னிலம் உயர்பள்ளியில் தமிழாசிரியர் ஆனார். பின்னர் தனியே பயின்று முதுகலை மெய்யறிவு முதுகலைப் பட்டங்கள் பெற்றார். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியரானார்.

தொல்காப்பியத்தை ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்தார். அதனாற் பண்டாரகர் (பிஎச்.டி.,) பட்டம் பெற்றார். விருதுநகர் செந்தில்குமார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இலக்கியம் என்னும் ஒரு தமிழ் மாதிகை நடத்தினார்.

மதுரை, முகவை, திருநெல்வேலி மாவட்டங்களில் 1948-ல் தமிழ் மறுமலர்ச்சிச் சொற்பொழிவுகள் நடத்தினார். 1948 பொங்கலன்று அவர் வதிந்த இல்லம் தீக்கொளுத்தப்பட்டது. பின்னர் திருநெல்வேலியில் உள்ள மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி பெற முயன்றார். அப்போது அது கிடைக்கவில்லை.

நாகர்கோயில் கல்லூரியில் பணியேற்றார்! மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த திரு. மு.வ. ஓய்வு பெற்றார். அந்த இடத்தைத் தனக்குத் தருமாறு கலைஞரையும் பேராசிரியரையும் கண்டு கேட்டுவிட்டுத் திருத்துறைப் பூண்டிக்குப் போந்து என்னிடம் விவரம் கூறிவிட்டு மதுரைக்குச் சென்றார்.

போகும்பொழுது கால்விரலில் தொடுதோலால் ஏற்பட்ட புண்ணைக் காட்டிச் சென்றார். மதுரை திருநகர் சென்றதும் அப்புண் புரையோடி இராசாசி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பண்டுவம் பார்த்தும், பயனளிக்காமல் அங்கேயே இறுதி மூச்சைவிட்டார்! யார் யாருக்கோ உருவச் சிலையமைக்கும் தமிழக அரசு அவரை மறந்து விட்டது ஏனோ?

- புலவர் வி.பொ.பழனிவேலனார்

இலக்குவனார் செய்யும் இருந்தமிழ்த் தொண்டை
விலக்குவான் செய்த வினையே - துலக்கியதே
ஊழின் வழியதொன் றின்மையால் மற்றொன்று
சூழினும் முந்துறுஞ் சொல்.

- மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர்

ஆசிரியர்: புலவர் கி.த.பச்சையப்பன், 19, குறுக்குச் சாலை, புதுவண்ணை, சென்னை - 81. வெளியீட்டாளர் : அ.கண்ணம்மாள், அச்சாளர் : பெ.நா.சிவம், அலைகள் அச்சகம், தெற்கு சிவன்கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.